திருக்கோவலூர்

[ஸ்ரீ. உப. வித்வான் ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்]

க்ஷேத்ரம்	திருக்கோவலூர்.
விமானம்	ஸ்ரீகர விமானம்.
தீர்த்தம்	க்ருஷ்ணபத்ரா என்ற தென்பெண்ணை நதி, சக்ரதீர்த்தம் முதலியன.
பெருமாள் (மூலவர்)	கிழக்கே திருமுக மண்டலம். வலது திருவடியை உயரே தூக்கிய நிலையில் திரிவிக்கிரமனாக ஸேவை ஸாதிக்கிறார்.
பெருமாள் (உத்ஸவர்)	கிழக்கே திருமுக மண்டலம். ஆயனார் என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கிறார்.
தாயார்	பூங்கோவல் நாச்சியார்.
பிரத்தியக்ஷம்	பிரம்மா, இந்திரன், குக்ஷி, சௌனகர், மிருகண்டு, காசியபர், மஹாபலி, காலவர், குசத்வஜ மன்னன், முதலாழ்வார்கள் முதலியவர்களுக்குப் பிரத்தியக்ஷம்.
மங்களாசாஸனம்	முதலாழ்வார்கள், திருமங்கையாழ்வார், ஸ்ரீவேதாந்த தேசிகன் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

திருக்கோவலூர் தென்னார்க்காடு ஜில்லாவில் விழுப்புரத்திலிருந்து காட்பாடி செல்லும் புகைவண்டிப் பாதையில் இருக்கிறது. புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில்தான் க்ஷேத்ரம் உள்ளது. புதுச்சேரியிலிருந்து பங்களூருக்கும், சித்தூரிலிருந்து வேலூர் வழியாகத் திருச்சிக்கும் செல்லும் நெடுஞ்சாலைகள் இவ்வூர் வழியாகச்

செல்லுகின்றன. ஊரின் வடக்காகத் தென்பெண்ணையாறு ஓடுகிறது.

இந்த ஊர், பஞ்ச க்ருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்களுள் ஒன்று என்பது பெரியோர் கொள்கை. பஞ்ச க்ருஷ்ணாரண்யங்கள் திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, கண்ணன் கவித்தலம், திருக்கோவலூர் என்பவையாகும். இந்த ஐந்தும் ஸ்ரீக்ருஷ்ணன் நித்ய ஸாந்நித்தியம் செய்தருளும் க்ஷேத்ரமாகையால் கிருஷ்ண க்ஷேத்ரங்கள் என்று அழைக்கப்படுவன.

இந்த ஊர், திருக்கோயிலூர் எனவும் வழங்கும். ஆழ்வார்கள், 'கோவல், கோவல்நகர், பூங்கோவலூர், திருக்கோவலூர்' என்று பல பெயர்களால் பேசியருளுவர். ஸ்ரீ தேசிகன் கோபபுரம் என்று கூறியருளுகிறார். இந்த க்ஷேத்ர மாஹாத்மியம் பாத்மபுராணத்தில் க்ஷேத்ர காண்டத்தில் 11 முதல் 18 அத்யாயங்களால் விஸ்தாரமாகப் பேசப்பட்டிருக்கிறது.

11 முதல் 15 அத்யாயங்களின் சுருக்கம்

மஹாபலியாகிய அசுர சக்ரவர்த்தி தன் பெயருக்கேற்ப நிகரற்ற பலம் பொருந்தியவனாக மூன்று உலகங்களையும் அடக்கி ஆண்டு வந்தான். அவனால் கட்டப்பட்டுப் பாதாள லோகத்தில் சிறைவைக்கப்பட்ட இந்திராதி தேவர்களின் தாயாகிய அதிதிதேவி மனம் வருந்தி அவர்களது விடுதலைக்காக ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து ஸித்தாச்ரமத்தில் அருந்தவம் இயற்றினாள். அவள் தவம் செய்வதை அறிந்த காசியபப் பிரஜாபதி தம் பார்யையின் எண்ணம் ஈடேறவும் தர்மம் தழைக்கவும் எண்ணி, ஸத்ய லோகத்திலிருந்து தாமும் பூலோகம் சேர்ந்து ஸித்தாச்ரமத்தில் கடுந்தவமியற்றினார். பக்தபராதீனனாகிய ஸ்ரீமந் நாராயணன் அவர்களின் தவத்தை மெச்சிப் பிரத்யக்ஷமானார். தம்மைத் தொழுது வாயாரத் துதித்த காசியபருக்கும் அதிதிதேவிக்கும் திருக்குமாரராகத் தாம் அவதரித்துத் தேவர்களையும் முனிவர்களையும் வாழ்த்தி எல்லா உலகங்களையும் அருள் செய்து மகிழ்விக்க எண்ணி, அதற்காக அதிதிதேவி பயோவ்ரதம் அநுஷ்டிக்கும் படி கூறி மறைந்தார்.

அவர் கூறியபடியே பங்குனி மாதம் பௌர்ணமிக்கு முன்பாகப் பயோவ்ரதம் அநுஷ்டித்தாள் அதிதிதேவி. ஸ்ரீமந் நாராயணன் காசியப முனிவருக்கும் அதிதிதேவிக்கும் குமாரராக அதிசுந்தர வடிவத்துடன் வாமனராக அவதரித்தார்.

அழகின் இருப்பிடமாகிய பரமன் இரண்டு அடி உயரமுள்ள வாமனனாய் அவதரித்து, அகில லோகத்திலுள்ள அழகெல்லாம் ஒருங்கே திரண்டாற் போன்ற திருவடிவத்துடன், கண்டவர் உள்ளத்தையும் கண்களையும் கொள்ளை கொண்டு

வளராலானன். அத்தகைய வாமனனைக் கம்பர் மிகவும் அழகாக வர்ணிக்கிருர்—

கால நுனித்துணர் காசிபன் என்னும்
வாலறிவற் கதிதிக் கொரு மகவாய்
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனன்.

சாகோபசாகமாகப் பணைத்துப் பெருகிப் படர்ந்து வளரும் ஓர் ஆலமரம் முதலில் முளைப்பதற்கு முன்பாகச் சிறிய ஆலம் வித்தில் அடங்கியிருப்பது போல் அகிலமெல்லாம் அடங்கிய திருவயிற்றையுடைய பரமன், அகில லோகங்களையும் வியாபிக்கும் தன் திரிவிக்கிரமனுகிய பெருவடிவம் மிகமிக ஒடுங்கி இரண்டடியாகிய குறுவடிவத்துள் அடங்கியிருக்கும்படி ஓர் குறள்-வாமனன்- ஆனன் என்ற கருத்து மிகவும் சீரியது.

உரிய காலத்தில் உபநயனதிகள் செய்யப் பெற்ற வாமனர் ப்ருகுவத்ஸம் என்ற இடத்தில் நடந்த மஹாபலியின் யாகத்திற்கு எழுந்தருளினர். வாமனருடைய வடிவத்தில் மயங்கியவர் பலர்; அவர் சொன்ன வேத மந்த்ரங்களில் மயங்கியவர் பலர். தம்மை மறந்து அவரவர்களும் உபசரிக்க, மஹாபலி எதிர்கொண்டு அழைத்து, ''வேண்டுவதென்ன?'' என்று விநயமாகக் கேட்டான். பரமன் தாம் நின்று தவம் செய்வதற்கு நிலம் வேண்டும் என்றும், தம் பாதத்தால் தாமே அளந்துகொள்ளும்படி மூன்று அடி நிலம் தந்தால் போதும் என்றும் கூறினர்.

மஹாபலி தருவதற்கு எண்ணியபோது அருகில் இருந்த அசுரகுரு சுக்கிராசாரியர், ''வந்திருப்பவன் மஹாவிஷ்ணு. உன் தானமும் யஜ்ஞமும் நிறைவேருமல் செய்வான் அவன். அவன் எப்போதும் தேவர் பக்ஷபாதி. உன்னை அடியோடு கெடுப்பான். ஆதலால் தானம் கொடுக்காதே'' என்று தடுத்தார்.

அதைக் கேட்ட மஹாபலி வியப்பெய்தி, ''ஸர்வேச்வரனே என்னிடம் வந்து யாசகம் கேட்டால் அதைவிடப் பெரிய பேறு எனக்கு வேறு யாது உள்ளது?'' என்று கூறிக்கொண்டே தன் மனைவி விந்தியாவளி கிண்டியிலிருந்து நீர்த்தாரை வார்க்க, தானம் கொடுக்கலானன். அப்போதும் கடைசியாக ஒரு முயற்சி செய்து தானத்தை விலக்க நினைத்த சுக்கிரன் கிண்டியின் மூக்கில் ஒரு வண்டு உருவம் கொண்டு புகுந்து அடைத்துக்கொண்டான். நீர் விழவில்லை. அதை அறிந்த பகவான் தம் கையில் இருந்த தர்ப்ப பவித்திரத்தின் நுனியால் அந்தத் துவாரத்தைக் குடைய, அதனுல்

சுக்கிரன் கண்ணை இழந்தான். இந்த விருத்தாந்தத்தை,

''மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்,
தக்கது இது அன்றென்று தானம் விலக்கிய,
சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய
சக்கரக் கையனே அச்சோ அச்சோ
சங்கமிடத்தானே அச்சோ அச்சோ''

என்று பாடுகிறார் பெரியாழ்வார்.

மஹாபலி தானம் வழங்கினான். வாமனனாக இருந்த பரமன் திரிவிக்கிரமன் ஆனான். மிகமிகப் பெருவடிவு. அகில உலகமும் நிறையும் அந்தமில்லாத் திருமேனி. அத்துடன் கீழுலகங்களை ஒரு திருவடியாலும் மேலுலகங்களை ஒரு திருவடியாலும் அளந்துவிட்டான். மேலே வளர்ந்து சென்ற திருவடிக்குப் பிரம்மா திருமஞ்சனம் செய்தார். அந்தத் தீர்த்தமே மூன்று உலகங்களையும் பரிசுத்தமாக்கும் கங்கை. சிவன் சடையில் தாங்கி மகிழும் பெருமை பெற்ற நதி அது. ''மூன்றாவது அடிக்கு நிலம் எங்கே?'' என்று பகவான் மஹாபலியைக் கேட்டார். மஹாபலி அஹங்காரம் நீங்கித் தன் தலைமேல் அந்தத் திருவடியை வைக்கும்படி பிரார்த்தித்தான். அவன் பக்தனாக இருந்தாலும், தேவர்களை வருத்திய காரணத்தினால் அவனை எம்பெருமான் சிறையில் வைத்தார். பிறகு ப்ரஹ்லாதனுடைய பிரார்த்தனையினால் சிறை விடுத்து அவனை ஸுதலம் என்ற உலகத்தில் இந்திரனாக வைத்து, தாம் சேவகராக இருந்து அவனை ரக்ஷித்து வருகிறார். தண்டிக்கப்பட்ட சுக்கிரனுக்கு வேதாத்மாவால் ஞானம் அருள்செய்து, தம்மை எதிர்த்த நமுசி முதலியவர்களையும் கருடனால் துரத்தியடித்தார் பரமன். அகில லோகமும் வாழ்ந்து ஆநந்தஸாகரத்தில் மூழ்கியது.

இப்படி எம்பெருமான் வாமனராகவும் பிறகு திரிவிக்கிரமராகவும் அவதரித்த காலத்தில் அதி உக்கிரமாகத் தவம் புரிந்துகொண்டிருந்தபடியால் அந்த அவதாரமூர்த்தியைத் தாம் தரிசிக்க வேண்டுமென்று விரும்பிய மிருகண்டு முனிவர் திருப்பாற்கடலை அணுகிப் பரமனைப் பலவாறு துதித்தார். பரமன் அவருடைய மனத்திலுள்ளதை அறிந்து, ''பாரதவர்ஷத்தில் வேங்கடத்துக்குப் பதினைந்து யோஜனை தெற்கில், தென்கிழக்குக் கடலுக்கு நான்கு யோஜனை மேற்கில் அழகான பெண்ணை என்ற கிருஷ்ணபத்ரா நதியின் தென்கரையில் ஓர் அற்புதமான க்ஷேத்ரம் உண்டு. அங்கே சென்று தவமியற்றினால் உம் எண்ணம் ஈடேறும்'' என்று கூறினார்.

அப்படியே மிருகண்டு, பலவிதமான வர்ணங்களோடும் அரிய வாசனைகளோடும் கூடிய புஷ்பங்கள் எப்போதும்

பொலியும் அழகான பொழில்கள் சூழ்ந்து எப்போதும் ரம்யமானதும் தெய்வ ஸாந்நித்யம் உடையதுமான அவ்விடத்தை அடைந்து, பெண்ணை நதியில் அநுஷ்டானம் புரிந்துகொண்டு தம் மனைவியும் தாமுமாகப் பகவதாராதனம் செய்துகொண்டு கடுந்தவம் புரிந்தார். மிருகண்டுவும் மித்திரவதியுமான அவர்களின் தவத்தை மெச்சிய பரமனும் மஹாலக்ஷ்மியும் வயோதிகத் தம்பதியாக வடிவம் கொண்டு பகல்வேளையில் அவர்களிடம் சென்று, தமக்கு நல்ல ஆகாரம் வேண்டுமென்று கேட்டனர். மிருகண்டு தம்பதிகள் அன்றைய ஆகாரம் முடித்துவிட்டிருந்த சமயம் அது. செய்வது என்னவென்று அறியாமல் குழம்பிய மிருகண்டு வருந்தி மனைவியிடம் தம் நிலையை - அதாவது ஒரு வயோதிகப் பிராம்மணத் தம்பதிகளுக்கு அன்னமளிக்கக்கூட யோக்யதை இல்லாத தம் பரிதாப நிலையைக் கூறி வருந்தினர். அவர் மனைவி அவரை வணங்கிக் கவலையை விடும்படி கூறி, மஹாலக்ஷ்மியை உள்ளன்போடு வேண்டினாள். உடனே ஸகல பதார்த்தங்களுடன் மிஷ்டான்னம் அங்கே பல பாத்திரங்களில் தோன்றியது. அந்த வயோதிகத் தம்பதிகளுக்கு அதை அளித்து உபசரிக்கவும், அப்போது திடீரென்று ஸ்ரீகர விமானத்தில் பகவான் இடத் திருவடியைப் பூமியில் ஊன்றி வலத் திருவடியை உயரத் தூக்கிய வடிவில் திரிவிக்கிரமராக ஸேவை ஸாதித்தார். ஸகல தேவாஸுர யக்ஷ ராக்ஷஸ கின்னர கிம்புருஷ முனி மனுஷ்ய ஸித்த வித்யாதரர்களும் துதித்தனர்.

பிறகு பரமன் மிருகண்டுவின் வேண்டுகோளின்படி அவ்விடத்தில் அந்தத் திருக்கோலத்துடனே என்றும் யாவருக்கும் ஸேவை ஸாதிக்க இசைந்து, அப்படியே இன்றும் காட்சி தந்தருள்கிறார்.

மிருகண்டு தவம் செய்த இடம் 'மிருகண்டு பாறை' என்று இன்றைக்கும் புகழப்படுகிறது. திருக்கோவலூர்த் துறை மிகப் புனிதமானது. அவ்வூர்த் துறையில் பெண்ணையில் நீராடுகிறவர்கள் எண்பது பசுக்களைத் தானம் செய்த புண்யம் பெறுவர். உலகளந்த திரிவிக்கிரமனுடைய திருவடியில் பிரம்மா அபிஷேகம் செய்த தீர்த்தம் சிறிது தெறித்துத் தற்போது கர்நாடக ராஜ்யம் என்று அழைக்கப்படும் இடத்தில் ஒரு மலையில் விழ, அதிலிருந்து பெருகியது இந்தப் பெண்ணையாறு என்பர் பெரியோர். இவ்வூரில் இந்த நதியேயன்றி இன்னும் பல புண்ய தீர்த்தங்களும் உண்டு. இந்த க்ஷேத்ரத்தில் செய்யும் தான தர்ம ஜப யஜ்ஞ பாராயணாதிகள் ஒன்று பல கோடியாகப் பலனைத் தரும் என்று புராணம் கூறுகிறது.

பகவானுடைய திருவடியை அர்ச்சித்த பிரம்மா மறுபடி திருக்கோவலூர் வந்தடைந்து, பரமனுக்கு உத்ஸவாதிகள் நடத்தித் தேவர்களுடன் வந்தனை வழிபாடுகள் நடத்தி வரம் பெற்றதாகப் புராண வரலாறு. எழுபத்திரண்டு பிரம்மாக்கள் ஆராதித்ததாகப் புராணம் கூறும். பரமன் தம்மைத் திருப்பாற்கடலுக்கு வந்து துதித்த தேவர்களையும் முனிவர்களையும் திருக்கோவலூருக்கு வந்து வழிபடும்படி நியமித்து, அவர்களுக்குத் திருக்கோவலூரில் பஞ்சாயுதங்களுடனும் பூங்கோவல் நாச்சியாருடனும் ஸ்ரீக்ருஷ்ணனுக சேவை ஸாதித்தார் என்றும், அவர்கள் வேண்டியபடி இன்றும் அப்படியே ஸேவை ஸாதிக்கிருர் என்றும் பாத்மபுராணம் கூறுகிறது. உத்ஸவருக்கு ஆயனர் என்றும், மூலவருக்குத் திரிவிக்கிரமன் என்றும் திருநாமம். வலத் திருக்கரத்தில் சங்கம் தரித்த மூலவர் கோலம் அத்யத்புதமானது.

ஊரிலேயும் ஊரைச் சுற்றியும் பல தீர்த்தங்கள் இருந்தன என்றும், அந்த அந்தத் தீர்த்தங்களில் அவ்வக்காலங்களில் நீராடிப் பல தேவர்களும் முனிவர்களும் திரிவிக்கிரமனுல் இஷ்டஸித்தி அடைந்தனர் என்றும் புராண வரலாறு. இப்போதும் சீர்கெட்ட நிலையில் பல குளங்கள் ஆங்காங்கே காண்கின்றன. பெண்ணை நதி தன் பெருமை குன்றுமல் பாய்ந்தோடிக்கொண் டிருக்கிறது. பாத்மபுராணம் பதினைரும் அத்யாயத்தில் (க்ஷேத்ரகாண்டம்) தீர்த்தங்களின் மஹிமை வெகுவாகப் பேசப்படுகிறது.

17, 18 ஆம் அத்யாயச் சுருக்கம்

காலவர் என்ற முனிவர் இந்த க்ஷேத்ரத்தில் தவம் புரிந்து வந்த காலத்தில் பாதாளகேது என்ற அசுரன் அந்த முனிவரையும் மற்ற ஸாதுக்களையும் மிகவும் ஹிம்ஸித்தான். அவனுடைய உபத்திரவம் நீங்க வேண்டுமென்று காலவர் கண்ணனிடம் சரணுகதி செய்தார். கண்ணன் அபயம் அளித்தான். கண்ணன் அருளால் குசத்வஜன் என்ற மன்னன் காலவரின் ஆசிரமத்துக்கு வந்தான். அவரிடம் பாதாளகேதுவின் அக்கிரமங்களைக் கேட்டு அறிந்த குசத்வஜன் கண்ணனைப் பிரார்த்தித்துக் குவலயம் என்ற தெய்விகக் குதிரையைப் பெற்று அதன்மேலேறிப் பாதாளகேதுவை எதிர்த்தான். மிகவும் கோரமான யுத்தம் நடந்தது. முடிவில் பாதாளகேது மாண்டொழிந்தான். தேவரும் முனிவரும் மகிழ்ந்தனர். கண்ணன் புகழ் ஓங்கியது. குசத்வஜன் இந்த க்ஷேத்ரத்தில் பல காலம் இருந்து பின் மோக்ஷமடைந்தான்.

தமிழில் முதல்முதலாகப் பாட்டுப் பாடிய பெருமை பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார்களுக்கே உண்டு. தென்னாட்டில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பிரவசனம் செய்த பெருமையும் அவர்களதே என்பது பெரியோர் கொள்கை. அவர்கள் அப்படிப் பாடி ஸ்ரீவைஷ்ணவ தர்சனப் பிரவர்த்தனம் செய்ய ஆரம்பித்த இடம் இந்தத் திருக்கோவலூரே.

'பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக் கருள்தரும் ஆயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக் கிருள்செக நான்மறையந்தி நடைவிளங்க
வீட்டுக் கிடைகழிக்கே வெளிகாட்டும் அம் மெய்விளக்கே'

என்ற ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தி இதை விவரிக்கும்.

முதலாழ்வார்களை இவ்வூரில் எம்பெருமான் ஒரு நாள் இரவு ஓர் இடைகழியில் புகுந்து நெருக்கி, அவர்களால் மெய் விளக்கும் மொழி விளக்கும் ஞான விளக்கும் ஏற்றி மங்களாசாஸனம் செய்யப்பெற்ற இதிஹாஸம் மிகப் பிரசித்தமானது.

கரும்பாலையில் அகப்பட்ட கரும்பை அதிலுள்ள மூன்று உருளைகள் நசுக்கிப் பிழிவதுபோல் பரமனை முதலாழ்வார்கள் அநுபவித்துப் பிழிந்த சாற்றின் சொல்லமுதாகிய சர்க்கரையே முதல் மூன்று திருவந்தாதிகள் என்று பாடுகிறார் ஸ்ரீதேசிகன். தேஹளீசஸ்துதியில் ஸ்ரீதேசிகன் இவ்வெம்பெருமானை அநுபவித்திருப்பது மிகவும் சிலாக்கியமானதும் ரஸபுஞ்ஜமானதுமாகும்.

இந்தக் கோயில் பல்லவர் காலத்துக்கும் முன்பு கட்டப்பட்டதாகக் கூறுவர். மிக மிகப் பெரிய கோயில். பதினொரு நிலையுள்ள கோபுரம், பற்பல மண்டபங்கள், பற்பல கோபுரங்கள்.

ஜனநாத வளநாடு என்றும், திருமுனைப்பாடி நாடு என்றும் அந்த நாட்டையும், குருக்கைக் கூற்றம் என்று உள்நாட்டையும், திருக்கோவலூர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று ஊரையும், திருவிடை ஆழ்வார் என்று பெருமாளையும் கல்வெட்டுக்கள் கூறும்.

இடைக்காலத்தில், சோழ மன்னர்கள் வீர சைவர்களாகவும் வைணவத்தில் வெறுப்புற்றவர்களாகவும் இருந்த காலத்திலும், துருக்கர் படையெடுப்பு நடைபெற்ற காலத்திலும் 'எம்பெருமானார் ஜீயர்' என்ற மஹான் இந்தக் கோயிலைக் காத்தார் என்றும், அதனால் அந்த மஹானின் வழியில் வரும் ஜீயர் ஸ்வாமிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு இந்தக் கோயில் நிர்வஹிக்கப்படுகிறது என்றும் இந்தக் கோயில் சரிதம் கூறுகிறது. உலகளந்தான் பொன்னடியே சரணம்.